RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s715

OPEN ACCESS

# நீர்த்துளி புதினத்தில் சமுதாயச் சிக்கல்கள்

**சு. முருகவேல்** [அ, *]

[அ] தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002, தமிழ்நாடு, இந்தியா.

# Community Issues in the Novel ‘Neerthuli’ (Water Droplet)

**S. Murugavel** [a, *]

[a] St. Xavier's College, Palayamkottai, Tirunelveli-627002, Tamil Nadu, India

* Corresponding Author: murugavel250294@gmail.com

Received: 30-12-2021
Revised: 19-04-2022
Accepted: 01-05-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

Neerthuli (2011) is one of the novels written by the creator Subramanian. The book won the 2012 Jayakanthan Creative Literary Award as the Best Novel. The purpose of this article is to explore the social issues documented in this book. Living in a modern living environment, Subramaniam takes a keen interest in the life revolves around himself and shapes it through his natural language. The world he sees is the one with full of changes. Therefore, his works are also innovative. It is a characteristic that is humbly expressed in the purpose of symbolizing the inevitable pulling event of the disintegration of the family structure that has been defined and preserved over time. Expressing the new way of life problem of "living together" with the most precise mindsets and movements with artistic elegance reveals a different nature of the writing of the creator Subramanian. The ‘Neerthuli’ novel accurately reveals the difficulties of living together with an unmarried young man and a distressed woman who is forced into a new environment after a divorce. The novel's fundamental problem is the life problems of two immigrants who are trying to find a new way of life. Set against the backdrop of a new environment, it embodies the lives of migrated human beings with its dynamic properties. This novel confronts the predicament faced in a woman's life in which she is tortured by her husband, mentally and physically without approving the divorce. Moreover, the novel did not fail to point out the atrocities suffered by the workers. He has recorded the dominance of employers in the workplace, labor exploitation and oppression. He has recorded ecology as one of the problems that is to be looked at in today's environment. He also talked about ecological issues that include water pollution, land pollution, air pollution, and pollution caused by the use of plastics.

**Keywords:** Neerthuli, Subramanian, Pollution, Environmental Issues

## முன்னுரை

சமுதாயத்தில் காணப்படும் பிரச்சனைகளின் பிரிதிபலிப்பே தற்கால இலக்கியங்களாகும். அந்தவகையில், படைப்பாளி சுப்ரபாரதிமணியனும் தனது நாவலில் சமுதாயத்தில் நடக்கும் அனைத்து பிரச்சனைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். வருமானம் ஈட்ட நகரத்திற்கு வரும் மக்களின் மனச்சிதைவும், பாலியல் உளவியல் சிக்கல்களும் “நீர்த்துளி” நாவலின் மையக்கருத்துக்களாகும். கிராமங்களிலிருந்து பிழைப்புத்தேடி நகரத்திற்கு செல்பவர்கள் அடையும் துன்பங்களையும், துயரங்களையும், இன்னும் பிற சமுதாயச் சிக்கல்களையும் “நீர்த்துளி” நாவல் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

## சமுதாயம்

பொதுவாக மனித குலத்தில் சமுதாயம் உருவாவது எளிதன்று. மக்கள் கூட்டமே சமுதாயம். சமுதாயம் ஆண், பெண் என்ற இருபால் பகுப்பையும், தனி மனிதனையும் உள்ளடக்கியது.

"ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றி கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் (Community) எனப்படும். இது மக்கள் பலருடன் கூடிச் சமுதாயத்தின் ஒரு பகுதியாகப் பிரிக்கப்பட முடியாமல், பிரியாமல் வாழ்ந்தால் சமுதாயம் உருவாகும் (Parimanam, 2007).

## சமுதாயச் சிக்கல்கள்

மனிதர்கள் கூடி வாழும் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்கள் ஏராளம். அவற்றுள், முக்கியமான ஒன்று பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களே. அவற்றை சுப்ரபாரதி மணியன் தனது நாவலில் பதிவுசெய்துள்ளார். மேலும், தொழிலாளர் சந்திக்கும் சிக்கல்கள், சூழலியல் சிக்கல்கள் என அனைத்து வகையான சிக்கல்களையும் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். அவற்றைக் குறித்துக் காணலாம்.

## பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

குடும்ப அமைப்பின் பெண் என்பவள் பெரும்பாலும் ஆணுக்கு அடிமையாகவே இருக்கின்றாள். பெண்கள் குடும்பத்தில், பொது இடங்களில், பள்ளிகளில், கல்லூரிகளில், பேருந்து நிலையங்களில் சிக்கல்களை அனுபவிக்காத இடங்களே இல்லை என்று கூறலாம். இதனையே பிரேமா, "பெண்கள் இல்லம் என்ற குறுகிய வட்டத்திற்குள் சிறைப்பட்ட பின்னர், அதைச் சிறை என்று உணர்ந்தும், அதிலிருந்து தப்பி ஓட முயற்சியின்றி முடங்கிக் கிடக்கின்றனர். அதற்குக் காரணம் "கிளிக்குக் கூண்டு பழகிப் போய்விட்டது. அதன்பின் அதற்குக் கூண்டு சிறையாகவில்லை. கூண்டு ஒரு வீடாயிற்று. பிறகு அதுவே ஒரு சின்ன உலகமாக மாறிவிட்டது" என்கிறார். அதாவது பெண் உலகமே பிற்போக்குத்தனத்தில் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது" என்கிறார் (Prema,2007). மேலும், "தாய்வழிச் சமூகம் மறைந்து தந்தைவழிச் சமூகம் தோற்றம் பெற்ற காலத்தில் பெண்ணினத்தின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது எனலாம். தாய்வழிச் சமூகம் அழிக்கப்பட்டது. நிலவுடைமைச் சமூகத்தில் குடும்பம் நிறுவன மயமானபோது பெண்ணின் மீது ஏராளமான கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டன" என்கிறார் (Aranga Mallikaa, 2008).

## ஆணாதிக்கம்

பெண்கள் பல துறைகளில் முன்னேறி வந்தாலும் அவர்களை ஏளனமாக எண்ணும் அடிமையாக நடத்தும் ஆணாதிக்கவாதிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இதனை, "நீர்த்துளி" புதினத்தில் கலாவின் கணவனான சுந்தரவேல் என்னும் கதாபாத்திரத்தின் வாயிலாக படைப்பாளி வெளிக்காட்டியுள்ளார்.

சுந்தரவேல் என்பவன் இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகும் தன் மனைவி கலாவை மிகவும் கொடுமைப்படுத்துகிறான். அதே சமயத்தில் அவளுக்கு விவாகரத்தும் தர மறுக்கிறான். வேறு ஒருவனுடன் அவள் சேர்ந்து வாழ்ந்து வரும்நிலையில் அவளை மிரட்டவும் செய்கிறான். இதன்மூலம் அவனது ஆணாதிக்கம் வெளிப்படுகிறது. இதனை,

"விவாகரத்து தரமாட்டன். அவளை உயிரோட இருக்க வுட மாட்டன்" (Subramanian, 2011)

"சுந்தரவேல் மிரட்டல் தொடர்கிறது. வக்கீலிடம் திரும்பத் திரும்ப "டைவர்ஸ் தரமாட்டன். கல்யாணம் பண்ணிக்க வுடமாட்டன். எதுக்கும் துணிவேன்" (Subramanian, 2011)

"சுந்தரவேலுவிடம் இருந்து தொடர்ந்து மிரட்டல் வருகிறது. உன்னை வாழ விடமாட்டேன் என்கிறான்" (Subramanian, 2011).

என்னும் வரிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும், கலாவின் கணவன் சுந்தரவேல் அவளை அடித்துக் கொடுமைப்படுத்தும் செயலை,

“சுந்தரவேலிடம் அவள் அடியும், அவமானமும் என்று பல தரம் பட்டிருக்கிறாள்” (Subramanian, 2011)

“அந்த ஆள்கிட்ட பட்ட அடி சொல்லி மாளாது. தப்தப்பன்னு அடிச்சுட்டே இருப்பான். முகம் வீங்கிப்போகும். எல்லாத்து மேலயும் சந்தேகம். நீ யார்கிட்ட பேசுறே. அவன் யார்... இவன் யார்...நீ பெரிய அழகின்று நெனைப்போன்னு அடி வழுந்திட்டே இருக்கும்.” என்னும் பகுதிகளின் வாயிலாக அறியமுடிகிறது (Subramanian, 2011).

## பாலியல் கொடுமைகள்

பெண்களை ஒடுக்குகின்ற நோக்கில் பெண்களுக்கு எதிரான பல காரணிகள் செயல்படுகின்றன. இவற்றில் ஒன்றாகத்தான் பெண் பாலியல் ஒடுக்குமுறைக் காணப்படுகிறது. உலகின் வாழும் பெண்களில் பலா் பாலின ஒடுக்குதல்களால் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாக நிகழ்கால உண்மையாகும். உலகில் வாழும் பெண்களில் பலா் பாலின ஒடுக்குதல்களால் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாக நிகழ்கால உண்மையாகும். உலகில் வாழும் பெண்களில் பலா் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாலின ஒடுக்குமுறைக்கு பெண் ஆளாக நேரிடுகிறது. “வரதட்சணைக் கொடுமைகள், பாலியல் வன்முறைகள், மன உடல் அடிப்படையிலான வன்முறைகள் வார்த்தைகளினால் காயப்படுத்தல், உறவுகளைக் காட்டி மிரட்டல், உயிருக்கும் உடலுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்துதல் என்று குடும்ப தளத்தில் வன்முறைகள், எல்லையற்றுப் பரந்து காணப்படுகின்றன. இவ்வன்முறைகளை நிகழ்த்துவது கணவன் மட்டுமில்லாமல், அவனுடைய தந்தை, சகோதரர்கள் என்ற ஆண் உறவுகளும், தாய், சகோதரிகள் என்ற பெண் உறவுகளும் பல சமயங்களில் துணைபோகின்றன (Prema,2007)”.

“நீர்த்துளி” புதினத்தில் பெற்ற தகப்பனே மகளைப் பாலியல் வன்முறைக்குட்படுத்தும் அவலநிலையைப் பதிவுசெய்துள்ளார். இதனை,

“பெத்த தகப்பனே பொண்ணைக் கெடுத்துவிட்டு, இருநூறு பேர்கிட்ட விபச்சாரத்துக்கு அனுப்பறான். ஒருத்தன் பொண்டாட்டி இன்னொருத்தன் கிட்டங்கறது சகசமாயிடுச்சி” என்னும் வரிகள் நமக்குப் புலப்பத்துகின்றன (Subramanian, 2011).

## கணவனால் கைவிடப்படல்

திருமணம் என்பது மன ஒருமைப்பாடு. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையே இன்பமயமானது என்பது நம் நாட்டின் பண்பாடு. “ஒரு பாதியாய் பெண்ணும் மற்றொரு பாதியாய் ஆணும் ஒன்றுபடுவது திருமணமென்பது” என்பார் (Kalyanasundaram, 2001). திரு.வி.க திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று.ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் ஒன்றி, முழுத்தன்மை எய்திக் கடனாற்றுவதற்கு அவைகளை அன்புக் கயிற்றால் இயற்கை பிணிப்பது திருமணம். இத்தகைய திருமணப்பந்தத்தில் சில காரணங்களால் கணவன்மார்கள் மனைவியை விட்டு செல்கிறார்கள். இதனால் பெண்கள் அடையும் சிக்கல்களை அவர்கள் அறிவதில்லை. இதனை ஆசிர்யர் பதிவுசெய்துள்ளார்.

“நீர்த்துளி” புதினத்தில் தன் கணவனை விட்டுப்பிரிந்து வந்த கலாதன் கணவனான சுந்தரவேலடம் வாழப் பிடிக்காமல் அவனிடம் திருமண முறிவு வாங்கிட அல்லல் படுகிறார். அதே சமயத்தில் லிங்கத்துடன் சேர்ந்து நிம்மதியாகவும் வாழ அவளால் முடியவில்லை. இதனை,

“என்னைக் கொடுமைப்படுத்தணும். அவனுக்குத் தேவையான பொண்ணுகளோடு இருக்குற கண்டுக்கக் கூடாது அவ்வளவுதான்.” என்னும் வரிகள் விளக்குகின்றன (Subramanian, 2011).

## தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

பணியிடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அடிமைப்படுத்தப்படுவதையும், உழைப்புச் சுரண்டப்படுவதையும் ஆசிரியர் இப்புதினத்தில் கூறியுள்ளார்.

## அடிமைப்படுத்துதல்

நாள் முழுக்க வேலை செய்யும் நெசவாளர்கள் அவமதிக்கப்படுவதையும் நசுக்கப்படுவதையும் ஆசிரியர் பதிவுசெய்கிறார். தொழிலாளர்கள் கொத்தடிடைமகளாக இருப்பதைக் குறித்து எடுத்தியம்பியுள்ளார்.

“என்ன பெரிசா தினக் கூலிக. வேலைன்னா சம்பளம். இல்லைன்னா கட்டு. அவ்வளவுதா. கொத்தடிமைக் மாதிரி” (Subramanian, 2011).

“ஆமா பெரிய சம்பளம்…வேலைக்குப் போனா சம்பளம். இல்லீன்னா கட். தினக்கூலி மாதிரி. கொத்தடிமை…நாயிப் பொழப்பு” என்னும் பகுதிகள் இதனை விளக்குகின்றன (Subramanian, 2011).

## சுமங்கலித் திட்டம்

தமிழகத்தின் பஞ்சாலைகளில் வளரிளம் பருவப் பெண்களை வேலைக்கு சேர்ப்பதற்காக சுமங்கலித் திட்டம் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் அதிக பஞ்சாலைகளைக் கொண்ட ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தோர், உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளில், இந்தத் திட்டத்தின் செயல்பாடு அதிகமாக உள்ளது. மூன்று அல்லது ஐந்து வருட கால ஒப்பந்தத்தின் படி ஏழைக்குடும்ப இளம்பெண்கள் இந்த திட்டத்தில் இணைக்கப்படுகின்றனர்.

பணிபுரியும்போது அதிக நேரம் உழைக்க வைக்கப்படும். இவர்கள் பஞ்சாலையின் பஞ்சின் பணிபுரியும்போது அதிக நேரம் உழைக்க வைக்கப்படும். இவர்கள் பஞ்சாலையின் பஞ்சின் காரணமாக சுவாச சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகின்றனர். ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் பொய்க்குற்றம் சாட்டி பணம் தராமல் அனுப்பும் அணுகுறையும் உள்ளது.

வேலைக்கடுமை தாங்க முடியாமல் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்படும் இளம்பெண்கள் தற்கொலை செய்து கொள்வதும் உண்டு. இத்தகைய சுமங்கலித்திட்டத்தினால் ஏற்படும் பிரச்சனைகளைக் குறித்து ஆசிரியர் தனது புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

“சுமங்கலித் திட்டத்தைப் பத்தி படிச்சன். ஒரு பக்கம் கொத்தடிமைத் திட்டன்னு. இன்னொரு பக்கம் கல்யாணமாகாத பொண்ணுக கல்யாணம் பண்ணிக்க பணம் தர்றம்னு” (Subramanian, 2011).

“தாராபுரம் பகுதியில் மாத்திரம் 25 மில்லுக.25000 பேர் சின்ன வயசுப் பெண்கள் சுமங்கலி திட்டத்திலே” என்னும் பகுதிகள் இதனை விளக்குகிறது (Subramanian, 2011).

## குறைவான கூலியைப் பெறுதல்

பெரும்பாலான தொழிற்சாலைகளிலும், பணியிடங்களிலும் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களுக்கு போதிய ஊதியம் கொடுப்பதில்லை. முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களை இவ்வாறெல்லாம் கொடுமைப்படுத்துகிறது.

“ஒண்ணும் பண்ண முடியாதபடி எல்லாந்தா செலவு ஆயிருதே. அதுவும் இந்த மாசம் பந்த்.லீவ்னு சம்பள கட்வேற..” (Subramanian, 2011)

என்னும் “நீர்த்துளி” புதின வரிகள் கூலியில்லாமல் பணியாளர்கள் வேலைசெய்வதைக் குறிக்கின்றன.

## வேலையில்லாத் திண்டாட்டம்

இன்றைய காலத்தில் படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு அரசால் வேலைவாய்ப்பு அளிக்க முடியவில்லை. அவர்கள் படித்திருந்தும் குடும்பங்கள் வறுமையிலே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கம். வேலை கிடைக்கவில்லை என்கிறபோது, படித்தப் படிப்புக்கு ஏற்று வேலையைச் செய்யாமல், சின்னச்சின்ன வேலைகளுக்குள் முடங்கிப் போகிறார்கள்.

“பெரிய பெரிய படிப்பு படிச்சவங்களே சாதாரண வேலை பாக்கற காலம்” (Subramanian, 2011)

“முந்தி சாதாரண தொழிலாளி பெருசா கஷ்டப்பட்ட கொஞ்ச வருஷணத்தில் பனியன் மொதலாளியா ஆகலாம். இனியெல்லா அதுக்கு சந்தர்ப்பம் இருக்காது. இப்ப இருக்கற பிரச்சினையில பெரிய பிரச்சினையில் பெரிய பெரிய முதலாளிகளே தொழிலை வுட்டுட்டு தொழிலாளி ஆக வேண்டியிருக்கு” (Subramanian, 2011).

என்னும் வரிகள் இன்றைய தலைமுறையினரின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், அதனால் அவர்கள் குடும்பங்கள் படும் துன்பத்தையும் புலப்படுத்துகின்றன.

## சூழலியல் சிக்கல்கள்

தற்காலத்தில் நிலவி வரும் சிக்கல்களுள் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று சூழலியல் சிக்கலாகும். சூழலியல் மாசுபாடு என்பது மக்கள் தம் செயல்கள் மூலம் உருவாவதாகும் மாசுகளால் சூழலின் சான்றுகளாகிய காற்று, நீர், மண் வளங்களும் அங்கு வாழும் உயிரினங்களும் சீர்கேட்டுக்குள்ளாகி, அதனால் சூழல் சமநிலை சீரற்றுப்போதும் நிலையைக் குறிக்கும்.

## காற்று மாசுபாடு

இயற்கை எரிவாயு, பெட்ரோலியம், தொழிற்சாலைகள், நிலக்கரி மற்றம் மரம் எரித்தல், வாகனங்கள் விமானங்கள், அனல்மின் நிலையங்கள், விவசாயம் சமையலறை பயன்பாடுகள், உலோகவியல் செயலாக்கத்தில் இருந்து வெளிப்படும் கனிமம் தூசி, புச்சிக்கொல்லிகள், ஒப்பனை, ஜவுளி, கல்நார் போன்ற இரசாயன தொழிற்சாலைகள், விவசாயத்தில் புச்சிக்கொல்லிகள் பயன்படுத்துதல், அணுமின் நிலையங்கள் மற்றும் அணுவெடிப்புகளில் இருந்து வெளியேறும் கதிரியக்க பொருட்கள் போன்ற காரணங்களினால் காற்று மாசுபாடு ஏற்படுகிறது.

“தொழிலகங்கள், தானியங்கி ஊர்திகள், மக்கள் தொகைப்பெருக்கம், மரங்களை அழித்தல், அணுகுண்டு ஆய்வுகள், பெருங்காற்றால் ஏற்படும் தூசி துணுக்குகள், எரிமலை போன்றவை காற்று மாசுபடுவதற்குக் காரணங்களாக அமைகின்றன.” விளைவுகளையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார் (Mahizhenthi, 2003).

‘புகையிலையும் சிகரெட்டும் கலந்த வாசனை அவள் கணவன் சுந்தரவேல் அவளை நெருங்காதபோது கூட அந்த வாசனையை அவள் நுகர்ந்தபடியிருப்பாள். பல சமயங்களில் மதுவின் நெடியோடு புகையிலையும் சிகரெட்டும் கலந்திருக்கும். அவள் மீது அவன் இயங்க ஆரம்பிக்கிறபோது குமட்டிக்கொண்டுவரும் எந்நிலையிலும் வாந்தி வந்துவிடக்கூடாது என்று ஒரு கையை வாயில் வைத்திருப்பாள்” (Subramanian, 2011).

“வாகனம் எழுப்பிச் சென்ற புழுதி பைகளை முகம் அருகில் கொண்டு வந்து தற்காப்பாக்கியது” (Subramanian, 2011).

“புல்டோசர் புழுதியைக் கிளப்பிக் கொண்டிருந்தது” (Subramanian, 2011).

மேலும், பனியன் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் பஞ்சுத்துகள்களினால் காற்றுமாசுபாடு ஏற்பட்டு பல நோய்கள் ஏற்படுகின்றன. இதனை,

“அங்கு உலவிக்கொண்டிருக்கும் பஞ்சுத்துகள்தான் அவரின் மூச்சை அடைப்பதாகச் சொல்லி சமாதானப் படுத்திக்கொண்டார்” (Subramanian, 2011).

“பனியன் துண்டின் துகள்கள் மூக்குள் போய் சிரமப்படுவது தெரிந்திருந்தாலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவான்.” என்னும் வரிகளின் மூலம் அறியமுடிகிறது (Subramanian, 2011).

## நீர் மாசுபாடு

நீர் மாசுபாடு என்பது ஏதேனும் வெளிப்புறப் பொருள்களினால் நீர் தூய்மைக்கேடு அடைந்து, மக்களின் பயன்பாட்டிற்கேற்ப இல்லாமல் போய்விடுவதாகும். திருப்புரில் தொழிற்சாலைகளிலிருந்து வரும் சாயக்கழிவுகள் ஆற்றில் கலந்துவிடுகினற்ன. இதனால் அதில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் இறந்துவிடுகின்றன. நீரின் தன்மையும் கெட்டுப் பல்வேறு வகையான நோய்கள் பரவக் காரணமாக அமைகின்றன. “நீர்த்துளி” புதினத்தில் பின்வரும் பகுதிகளின் மூலம் இதை அறியமுடிகிறது.

“சிவன் தியேட்டர் முக்கில் இருந்த மாரியம்மன் கோவிலைப் பார்த்தபடி நின்றாள். சிறு வேப்பமரத்தின் கீழ் பரவியிருந்த பாறை இருவர் உட்காருவதற்கு வழிகாட்டியது. இடக்கைப் பக்கம் இருக்கிற எடம் ஒரு காலத்தில் பெரிய குளமாக இருந்திருக்கு. சின்னதா சாயப்பட்டறை ஆரம்பிச்சு, சாயத்தைக் கொளத்தில் எறக்கியிருக்காங்க, ரொம்ப வருசம் அப்படி, அப்பவும் இது ஓர் ஊர்லதா இருந்துச்சு, பிறகு பக்கத்துக் கெணறெல்லா சாயம் இறங்கி பிரயோசனமில்லாமெப் போச்சு” (Subramanian, 2011)

“தண்ணி வரது போலிருக்கு”

“என்ன தண்ணி”

“இங்கதா தண்ணி பல வகையாச்சே. மேட்டுப்பாளையம் தண்ணி, அத்திக்கடவு தண்ணி, பவானி தண்ணி, அப்புறம் பவானி தண்ணியோட உப்புத்தண்ணி கலந்தும்…”

“இன்னைக்கு என்ன தண்ணியோ”

“என்ன தண்ணியா இருந்தாலும் நமக்கு விசப் பரீட்சை தா” (Subramanian, 2011)

“வடக்கால பாஞ்சு வருசத்துக்கு முந்தி ஒரு சாயப்பட்டறை போட்டாங்க. ஒரு கொளம் வேற இருந்துச்சு. அப்புறம் ஊருக்கு நடுவுல வர ஆரம்பிச்சதும் வேற எடத்துக்கு மாத்திட்டாங்க. இந்தச் சின்னக் கொளத்தில் குப்பை கொட்டி மேடாயிருச்சு. போரிங் போட்டு சாயத்தண்ணியெ உள்ளே உட்டுட்ரக்காங்க” (Subramanian, 2011).

“ஆடு மாடு கூட குடிக்காத நீரை மனிதன் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான். ஆறும் குளமும் மாசடைந்த பின்பு நீரும் எப்படி இருக்கும் என்று முணுமுணுக்கப்படுகிறது” (Subramanian, 2011)

என்னும் வரிகள் நீர் மாசுபாடு குறித்து சுட்டிக்காட்டுகிறன்றன.

## மண் மாசுபாடு

இயற்கை மக்களுக்கு அளித்துள்ள கொடைகளுள் நிலமும் அடங்கும். வேளாண்மை செய்வதற்கும் வீடுகள் கட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும், தொழிற்சாலைகள் நிறுவுவதற்கும் இந்நிலத்தை நாம் பயன்படுத்தி வருகிறோம். நிலத்தின் மண் மேற்பரப்பானது கெடுதலான வேளாண்மைப் பயிற்சி, தொழிற்சாலைக் கழிவுகளைப் புதைத்தல், நகரக் கழிவுகளைக் கண்மூடித்தனமாக வெளியேற்றுதல், சுரங்கம் தோண்டுதல் ஆகிய அனைத்துக் காரணிகளால் சிதைப்படுவது மண்மாசுபாடு ஆகும்.

புச்சிக்கொல்லிகளால், நிலத்தில் விளையும் உணவுப் பொருள்களும் நஞ்சாகின்றன என்பதை,

‘அன்று நஞ்சை உண்டு

சாகுபடி ஆனது

இன்று நஞ்சை உண்டு

சாகும்படி ஆனது”

என்ற நெல்லை ஜெயந்தாவின் கவிதை சுட்டிக்காட்டுகிறது (Nellai Jayantha, 2004).

“மேற்குப்புறத்தில் இருந்து இரும்பு நாற்காலிகளில் எல்லாவற்றையும் அடைத்துக் கொண்டு படுத்துக் கிடந்தார்கள். கண்களை மூடியபடி சிலர் இருந்தார்க்ள. அவர்கள் காலுக்கடியில் குவிந்த குப்பை அபிரிமிதமாக இருந்தது. அந்தக் குப்பையில் இருந்த தங்கல் கால்களைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறவர்கள்போல தரையில் படாமல் தூக்கி வைத்திருந்தனா்” (Subramanian, 2011).

என்னும் வரிகள் மண் மாசுபாட்டையும், அதன் விளைவுகளையும் எடுத்துரைக்கின்றன.

## நெகிழி பயன்பாடு

மண்ணின் வளத்தினைக் கெடுக்கும் முக்கிய காரணி நெகிழி. இதன் பயன்பாடு இன்று அதிகளவில் இருந்துவருகிறது. எந்த பொருள் வாங்கினாலும் இன்று நெகிழி பயன்பாடு இல்லாமல் இருப்பதில்லை. நெகிழிப் பொருட்களைக் கழிவுகளாகத் தூக்கி எறியும்போது, மண்ணோடு மண்ணாக மக்கி மறையாமல் தீங்கிழைக்கும் மாசுகளாகின்றன. மரங்கள் செடிகொடிகளை வளரவிடாமல் செய்கின்றன.

நெகிழியின் பயன்பாட்டால் ஏற்படும் சூழலியல் சிக்கல்களை “நீர்த்துளி” நாவலில் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

“மழை ஓய்ந்து வீதியெங்கும் ஈரம் புத்து கிடந்தது. பிளாஸ்டிக் கழிவுகளில் கால்வைத்து பத்ரகாளியம்மன் கோவில் வீதிக்கு வந்தான்” (Subramanian, 2011).

“பழைய தாட்களின் நெடி லிங்கத்திற்கு மூக்கைத் துளைப்பதாக இருந்தது. கசகசவென்று பிளாஸ்டிக் பொருட்கள் சிதறிக் கிடந்தன” (Subramanian, 2011).

என்னும் வரிகள் நெகிழியின் பயன்பாடு பெருகிவிட்டதையும், அதன் தீங்கினையும் கூறுகின்றன.

## ஒலி மாசுபாடு

பெருநகரங்களில் ஒலிச்சீர்கேடு, நிலையான ஒரு சிக்கலாகும். ஒலிபெருக்கிகளும் எந்திரங்களும் சாலை ஊர்திகளும் வானூர்திகளும் எழுப்புகின்ற பேரோலியானது தலைவலியையும் நிறைவற்ற மனநிலையையும் ஏற்படுத்துவதோடு ஒரு சிலருக்குக் காதுகளையும் செவிடாக்குகிறது. இதுவே ஒலி மாசு ஆகும்.

“புவியில் விரும்பத்தகாத ஒலியை வெளியிடுவது ஒலிமாசு எனப்படுகிறது. இது நீர், நிலம், காற்று மாசுறுதல் போன்று தேங்காவிட்டாலும் அமைதிச்சூழலைக் கெடுப்பதால் சூழ்நிலையை மாசுபடுத்தலில் ஓர் உறுப்பாகக் கருதப்படுகிறது” (Mangala Murugesan, 2011).

ஆசிரியர் சுப்ரபாரிமணியன் தம்முடைய புதினத்தில் ஒலிமாசுபாட்டைக் குறித்தும், அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விளக்கியுள்ளார்.

“சிக்கந்தர் வீட்டிற்குப் பக்கத்திலிருந்து பனியன் கம்பெனி காலியாகிவிட்டது. எப்போதும் இரைச்சலாகவே இருக்கும். வீதியில் நின்று பார்த்தாலே எல்லோரும் பரபரப்பாக இருப்பது தெரியும். ஏதாவது வாகனம் வந்துபோய்க்கொண்டிருக்கும். பனியன் பொருள்கள் இறங்குவதும் ஏறுவதும் சாதாரணமாக இருக்கும். மின்தடை ஏற்படுகின்ற காலங்களில் உடனே செனரேட்டர் இயங்க ஆரம்பிக்கும். அதன் நாராச சத்தம் தொடர்ந்துகொண்டே இருக்கும். இரவுகளில் அது பல மடங்கு விசுவரூபித்து சிக்கந்தரை வீட்டைவிட்டு வெளியே வந்து நிற்கச் செய்யும். கோபப் பார்வையில்

செனரேட்டர் நின்று போய்விடக் கூடாதா என்றிருக்கும். வீடுகள் இருக்கும் பகுதியில் பனியன் கம்பெனி இருப்பது தொந்தரவாகத்தான் இருந்திருக்கிறது" (Subramanian, 2011).

"வாகனங்களின் இரைச்சலிலிருந்து தப்ப முடியாதபடி ரீங்காரம் இருந்து கொண்டே இருக்கும்" (Subramanian, 2011).

"புகைவண்டி நெருங்கும் சப்தம் விசுவரூபித்து வீதியை அடைத்தது" என்னும் வரிகள் ஒலி மாசுபாட்டைக் குறிக்கின்றன (Subramanian, 2011).

## ஆய்வுப்பயன்கள்

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், உழைக்கும் வர்க்கத்தினரால் தொழிலாளர்கள் அடையும் துன்பங்கள், அறிவியல் வளர்ச்சிகளால் ஏற்படும் சூழலியல் சிக்கல்கள் குறித்து "நீர்த்துளி" புதினம் வழி ஆராயப்பட்டது.

## முடிவுரை

"நீர்த்துளி" நாவலில், பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களாக, பாலியல் வன்முறைகள் கணவனால் அடிமைப்படுத்தப்படல், தொழிலாளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்களாக உழைப்புச்சுரண்டல், அடிமைப்படுத்தப்படல், நசுக்கப்படுதல், சுமங்கலித் திட்டம் என்னும் பெயரில் தொழிலாளர்களை ஏமாற்றுதல், சூழலியல் சிக்கல்களாக நீர் மாசுபாடு, நில மாசுபாடு, காற்று மாசுபாடு, நெகிழியால் ஏற்படும் மாசுபாடு ஆகியவற்றைக் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டன.

## References

Aranga Mallikaa, (2008) Tamil Kavithaigalil Penniyam, New Century Book House, Chennai, India.

Kalyanasundaram, T.V., (2001) Pennin Perumai, Thiruvarasu Putthaga Nilaiyam, Chennai, India.

Mahizhenthi, (2003) Sutru Suzhal Nokkil Sanga Tamizhagam, Thiruvarasu Putthaga Nilaiyam, Chennai, India.

Mangala Murugesan, T.K., (2007) Sutru Sulal Paathukappu, Kumaran Pathippagam, Chennai, India.

Nellai Jayantha, (2004) Thinai Mayakkam, Kumaran Pathippagam, Chennai, India.

Parimanam, A.M., (2007) Valviyar Kalanciyam, Tokuti-2, New Century Book House, Chennai, India.

Prema, (2007) Pen Eluthukalin Arasiyal, Arivu Pathippagam, Chennai, India.

Subramanian, (2011) Neerthuli, Arivu Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License